## ஒரு பார்வை - பகுதி 1

**அல்லாஹ், வாழ்வாதாரத்தை தான் நாடியவர்களுக்கு வழங்குகிறான். தன்னிடம் வருபவர்களை நேர்வழியில் செலுத்துகிறான். அவனை நினைவு கூறுவதால் உண்மையான ஆறுதல் கிடைக்கிறது. குர்ஆன் அருளப்பட்டதற்கான காரணத்தை விளக்கியவண்ணம் ஸூரா இப்ராஹீம் தொடங்குகிறது. குர்ஆன் மனிதகுலத்தை இருளில் இருந்து வெளிச்சத்திற்கு கொண்டு வருகிறது. அல்லாஹ்வின் அருட்கொடைகளுக்காக அவனுக்கு எப்போதும் நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்று மூஸா (அலை) மற்றும் அவரது சமூகத்தாரை உதாரணம் காட்டி அல்லாஹ் நமக்கு நினைவூட்டுகிறான்.**

## தராவிஹ் - 11: (ரக்அத் 1 முதல் 4)

### ஸூரா - 13, அர்ரஃது; வசனம்: 21 - 43; பிரிவு: 3 - 6

1. **அல்லாஹ், வாழ்வாதாரத்தை தான் நாடியவர்களுக்கு தாராளமாகவும், தான் நாடியவர்களுக்கு அளவோடும் வழங்குகிறான். (ஆதலால், தாராளமாக வழங்கப்பட்டவர்கள் வேண்டியவர்களென்றோ, அளவோடு வழங்கப்பட்டவர்கள் வேண்டாதவர்கள் என்பதோ கிடையாது). (ஸூரா - அர்ரஃது; பிரிவு: 3)**

2. **அவர்கள் இவ்வுலக வாழ்க்கையில் மகிழ்ச்சியடைகிறார்கள். மறுமையோடு ஒப்பிட்டால், இவ்வுலக வாழ்க்கை அற்ப இன்பமேயன்றி வேறில்லை. (ஸூரா - அர்ரஃது; பிரிவு: 3)**

3. **அல்லாஹ் தான் நாடியவரை வழிதவற விடுகிறான். தன்னிடம் திருந்தி வருபவருக்கு நேர்வழி காட்டுகிறான். கவனத்தில்**

கொள்ளுங்கள்: அல்லாஹ்வை நினைவு கூர்வதால் உள்ளங்கள் அமைதி பெறுகின்றன. (ஸூரா - அர்ரஃது; பிரிவு: 4)

4. அல்லாஹ் நாடியிருந்தால் மனிதர்கள் அனைவரையும் நல்வழியில் சேர்த்திருப்பான். (ஆனாலும் இந்த உலகில் மனிதன், நேர்வழியை தேர்வு செய்ய அவன் போக்கில் விட்டு வைக்கப்பட்டுள்ளான்). (ஸூரா - அர்ரஃது; பிரிவு: 4)

5. இறை மறுப்பாளர்களுக்கு, அவர்களுடைய தவறான செயல்களின் காரணமாக நோவினை தரும் வேதனைகள், அவர்கள் வீட்டு வாசலை வந்தடையும். (ஸூரா - அர்ரஃது; பிரிவு: 4)

6. (நபியே!) எவர்களுக்கு நாம் முன்னர் வேதத்தை அளித்தோமோ, அவர்கள் உமக்கு அருளப்பட்ட இவ்வேதத்தைப் பற்றி மகிழ்ச்சி அடைகிறார்கள். எனினும் அவர்களில் சிலர் அதன் ஒரு பகுதியை மறுக்கின்றனர். (ஸூரா - அர்ரஃது; பிரிவு: 5)

t

7. (நபியே!) அவர்களிடம் கூறுங்கள்: "நான் அல்லாஹ் ஒருவனையே வணங்க வேண்டும்; அவனுக்கு இணைவைக்கக் கூடாது என்று கட்டளை இடப்பட்டுள்ளேன். நான் உங்களை அவன் பக்கமே அழைக்கின்றேன். அவனிடமே எனது புகலிடம் இருக்கிறது". (ஸூரா - அர்ரஃது; பிரிவு: 5)

## ஸூரா - 14, இப்ராஹீம்; வசனம்: 1 - 12; பிரிவு: 1 - 2

8. மக்களை இருளிலிருந்து வெளிச்சத்திற்கு கொண்டுவருவதற்காக குர்ஆன் அருளப்பட்டது. (ஸூரா - இப்ராஹீம்; பிரிவு: 1)

9. அனைத்து இறைத் தூதர்களும், அவர்களின் சமூகத்தார் மொழியை பேசுபவர்களாக அனுப்பப்பட்டனர். உண்மையை அவர்களுக்குத் தெளிவு படுத்தவேண்டும் என்பதற்காக. (ஸூரா - இப்ராஹீம்; பிரிவு: 1)

10. மூஸா தம் சமூகத்தாரிடம், அல்லாஹ், அவர்களுக்கு வழங்கிய அருட்கொடையையும், ஃபிர்அவ்னின் கொடூரமான பிடியிலிருந்து அவர்கள் காப்பாற்றப்பட்டதையும் எண்ணிப்பார்க்குமாறு கூறினார்கள். அது அல்லாஹ்விடமிருந்து வந்த மிகப் பெரும் சோதனையாக இருந்தது. (ஸூரா - இப்ராஹீம்; பிரிவு: 1)

11. அல்லாஹ் கூறினான்: “நீங்கள் நன்றி செலுத்தினால் நான், மேன்மேலும் வழங்குவேன். நீங்கள் நன்றி மறந்தால் நிச்சயமாக என்னுடைய வேதனை கடுமையாக இருக்கும்”. (ஸூரா - இப்ராஹீம்; பிரிவு: 2)

12. பூமியிலுள்ள அனைவரும் இறைவனை மறுத்தாலும் அல்லாஹ்விற்கு எவ்வித இழப்புமில்லை. ஏனென்றால், அவன் தேவையற்றவன்; புகளுக்குரியவன். (ஸூரா - இப்ராஹீம்; பிரிவு: 2)

## ஒரு பார்வை - பகுதி 2

**ஏக இறையை மறுத்தோர் நரகத்தில் முடிவில்லாத துன்பத்தை சந்திப்பார்கள். ஷைத்தான் உங்கள் மீது எந்த அதிகாரமும் தனக்கு இருந்ததில்லை என்று ஒப்புக்கொள்வான்; அவன் உங்களை நன்றாக ஏமாற்றிவிட்டான். இப்ராஹீம் (அலை) அவர்கள் மக்கா நகருக்காகவும், அவருடைய பிள்ளைகளுக்காகவும், முஃமின்களுக்காகவும் செய்த துஆக்கள் விளக்கப்பட்டுள்ளது. அநீதி இழைத்த மக்களுக்கு வழங்கப்படும் தண்டனை விவரிக்கப்பட்டுள்ளது.**

## தராவிஹ் - 11: (ரக்அத் 5 முதல் 8)

### ஸூரா - 14, இப்ராஹீம்; வசனம்: 13 - 52; பிரிவு: 3 - 7

1. **ஏக இறையை மறுத்தோர் தம் தூதர்களை நோக்கி, "நாங்கள் உங்களை எங்கள் பூமியிலிருந்து வெளியேற்றி விடுவோம்; அல்லது நீங்கள் எங்கள் மார்க்கத்திற்குத் திரும்பி வந்துவிட வேண்டும்" என்று கூறினார்கள். அப்போது தூதர்களுக்கு இறைவன், "நிச்சயமாக நாம் அநீதியாளர்களை அழிப்போம்" என்று அறிவித்தான். (ஸூரா - இப்ராஹீம்; பிரிவு: 3)**

2. **நிராகரிப்பவனுக்கு முன்னால் நரகம் தான் இருக்கிறது, அங்கு அவனுக்கு சீழ் நீர் புகட்டப்படும். எல்லா இடங்களிலிருந்தும் அவனை நோக்கி சாவு வரும். ஆனால் அவன் சாகமாட்டான். அதற்கு அப்பாலும் அவனுக்கு கடுமையான வேதனை உண்டு. (ஸூரா - இப்ராஹீம்; பிரிவு: 3)**

3. **மறுமையில் தீர்ப்பு வழங்கப்பட்டவுடன், ஷைத்தான் (தன்னைப் பின்பற்றியவர்களிடம்) கூறுவான்: "அல்லாஹ் உங்களுக்கு அளித்த வாக்குறுதிகள் எல்லாம் உண்மையே. நானும் உங்களுக்கு சில வாக்குறுதிகள் கொடுத்தேன். ஆனால் அதை நான் மீறிவிட்டேன்". (ஸூரா - இப்ராஹீம்; பிரிவு: 4)**

4. “உங்கள் மீது எனக்கு எந்த அதிகாரமும் இருந்ததில்லை. நான் உங்களை அழைத்தேன். நீங்கள் என் அழைப்பை ஏற்றுக் கொண்டீர்கள். எனவே, என்னை குறை கூறாதீர்கள். உங்களையே நீங்கள் குறை கூறிக் கொள்ளுங்கள். இதற்கு முன், நீங்கள் என்னை அல்லாஹ்வுக்கு இணையாக ஆக்கியதை நான் மறுக்கிறேன். அநீதியாளர்களுக்கு நோவினை தரும் வேதனையுண்டு”, என்று ஷைத்தான் கூறுவான். (ஸூரா - இப்ராஹீம்; பிரிவு: 4)

5. அல்லாஹ்வின் அருட்கொடையை நீங்கள் கணக்கிட்டால் அதை உங்களால் எண்ணி முடிக்கவே முடியாது. (ஆனால்) மனிதன், அநீதி இழைப்பவனாகவும், நன்றி கொன்றவனாகவும் இருக்கிறான். (ஸூரா - இப்ராஹீம்; பிரிவு: 5)

6. இப்ராஹீம் (அலை) அவர்களின் துஆ: “யாஅல்லாஹ், இவ்வூரை - மக்காவை - பாதுகாப்பு தரும் இடமாக ஆக்குவாயாக! என்னையும், என் பிள்ளைகளையும் சிலை வணக்கத்திலிருந்து விலக்கி வைப்பாயாக! என்னைப் பின்பற்றியவர் என்னைச் சார்ந்தவர். எனக்கு யாரேனும் மாறுசெய்தால் நீ மன்னிக்கக் கூடியவனாகவும், கருணையாளனாகவும் இருக்கின்றாய்”. (ஸூரா - இப்ராஹீம்; பிரிவு: 6)

7. இறைவா! என்னுடைய வழித்தோன்றல்களில் சிலரை (அதாவது நபி இஸ்மாயிலை) பயிரற்ற பள்ளத்தாக்கு ஒன்றில், உனது புனித ஆலயத்திற்கு அருகே குடியமர்த்தியுள்ளேன். இறைவா! இவர்கள் தொழுகையை கடைபிடிப்பதற்காகவே இவ்வாறு செய்தேன். எனவே, மக்களின் இதயங்களை இவர்களின்பால் கவரச் செய்வாயாக! இவர்களுக்கு கனிகளை உணவாக வழங்குவாயாக! (இதன் மூலம்) இவர்கள் நன்றி செலுத்துவோர் ஆகலாம். (ஸூரா - இப்ராஹீம்; பிரிவு: 6)

8. யா அல்லாஹ்! என்னையும், என் சந்ததிகளையும் தொழுகையை நிறைவேற்றுபவர்களாக ஆக்கி வைப்பாயாக! என்னுடைய வணக்கங்களை ஏற்றுக் கொள்வாயாக! நியாயத்

தீர்ப்பு நாளின் போது என்னையும், என் பெற்றோர்களையும், இறைநம்பிக்கைகொண்டோரையும் மன்னிப்பாயாக! (ஸூரா - இப்ராஹீம்; பிரிவு: 6)

9. (நபியே!) வேதனை தரும் மறுமை நாளைப் பற்றி நீர் மனிதர்களுக்கு எச்சரிக்கை செய்வீராக! அநீதி இழைத்தோர் அப்போது, “எங்கள் இறைவா! எங்களுக்குச் சற்றே அவகாசம் கொடுப்பாயாக! உன்னுடைய அழைப்பை நாங்கள் ஏற்போம். உன்னுடைய தூதர்களையும் பின்பற்றுவோம்” என்று சொல்வார்கள். (ஸூரா - இப்ராஹீம்; பிரிவு: 7)

10. அந்த நாளில், இந்த பூமி வேறொரு பூமியாக மாற்றப்படும். வானங்களும் அவ்வாறே மாற்றப்படும். அப்போது அடக்கியாளும் ஏகனாகிய அல்லாஹ்வுக்குமுன் மக்கள் அனைவரும் தோன்றுவார்கள். (ஸூரா - இப்ராஹீம்; பிரிவு: 7)

11. அன்று பாவிகள் சங்கிலியால் பிணைக்கப்பட்டிருப்பார்கள். அவர்களுக்கு தாரால் ஆன ஆடை அணிவிக்கப்படும். நரக நெருப்பு அவர்கள் முகங்களை மூடிக்கொள்ளும். (ஸூரா - இப்ராஹீம்; பிரிவு: 7)

12. இவை எல்லாம் எதற்கென்றால், ஒவ்வொருவரின் செயலுக்கான பிரதிபலன் வழங்கப்படவேண்டும் என்பதற்காகவே. அல்லாஹ், கணக்குத் தீர்ப்பதில் துரிதமானவன். (ஸூரா - இப்ராஹீம்; பிரிவு: 7)

## ஒரு பார்வை - பகுதி 3

**காஃபிர்கள் மறுமை நாளில் முஸ்லிம்களாக இருக்க விரும்புவார்கள். குர்ஆனை பாதுகாக்கும் பொறுப்பை அல்லாஹ் ஏற்றுக் கொண்டான். ஆதம் (அலை) படைப்பு படைப்பு, இப்லீஸ் ஸஜ்தா செய்யாதது, இரண்டு மலக்குகள் வந்து இப்ராஹீம் (அலை) அவர்களுக்கு பிறக்கப்போகும் ஒரு மகனைப் பற்றிய நற்செய்தியைக் கூறுவது, அதே மலக்குகள் லூத் (அலை) சமூகத்தை அழிப்பது மற்றும் ஹிஜ்ர்வாசிகளின் (ஸமூது கூட்டம்) சம்பவங்கள் ஆகியவை இங்கே விவரிக்கப்பட்டுள்ளன.**

## தராவிஹ் - 11: (ரக்அத் 9 முதல் 12)

### ஸூரா - 15, அல்ஹிஜ்ர்; வசனம்: 1 - 99; பிரிவு: 1 - 6

1. **ஏக இறையை மறுத்தவர்கள், தாமும் முஸ்லீமாக இருந்திருக்கலாமே என்று ஏங்கும் அந்த நாள் விரைவில் வரும். (ஸூரா - அல்ஹிஜ்ர்; பிரிவு: 1)**

2. **நிச்சயமாக இந்த குர்ஆனை நாமே அருளினோம். உறுதியாக அதனை நாமே பாதுகாப்போம். (ஸூரா - அல்ஹிஜ்ர்; பிரிவு: 1)**

3. **தட்டினால் சப்தம் வரக்கூடிய மண்ணிலிருந்து அல்லாஹ், மனிதனை படைத்தான். அதற்கு முன்னதாக சூடான நெருப்பிலிருந்து ஜின்னையும் படைத்தான். (ஸூரா - அல்ஹிஜ்ர்; பிரிவு: 3)**

4. **அனைத்து வானவர்களையும், ஆதம் (அலை) அவர்களுக்கு சிரம் தாழ்த்தி ஸஜ்தா செய்ய உத்தரவிட்டான். (ஆனால்) ‘மண்ணிலிருந்து படைக்கப்பட்ட மனிதனுக்கு சிரம் தாழ்த்த மாட்டேன்’ என்று சொல்லி இப்லீஸ் (ஸஜ்தா செய்ய) மறுத்து விட்டான். (ஸூரா - அல்ஹிஜ்ர்; பிரிவு: 3)**

5. அல்லாஹ், இப்லீஸை சபித்தான். மேலும் மலக்குகளின் அவையிலிருந்து அவனை வெளியேறச் சொல்லி கட்டளையிட்டான். (ஸூரா - அல்ஹிஜ்ர்; பிரிவு: 3)

6. (மறுமையில் மனிதர்கள்) எழுப்பப்படும் நாள்வரை தனக்கு அவகாசம் அளிக்க வேண்டுமென இப்லீஸ், அல்லாஹ்விடம் கோரிக்கை வைத்தான். அல்லாஹ், அவனுக்கு அவகாசம் அளித்தான். (ஸூரா - அல்ஹிஜ்ர்; பிரிவு: 3)

7. "பாவங்கள் செய்வதை மக்களுக்கு அலங்காரமாக காட்டி அவர்கள் அனைவரையும் வழி கெடுப்பேன்" என்று இப்லீஸ் சத்தியம் செய்தான். ஆனால் மனத் தூய்மையுடன் இருக்கின்ற அடியார்களை இப்லீஸால் ஒன்றும் செய்ய முடியாது. (ஸூரா - அல்ஹிஜ்ர்; பிரிவு: 3)

8. அதற்கு அல்லாஹ், "நிச்சயமாக என் அடியார்கள் மீது உனக்கு எவ்வித அதிகாரமும் இல்லை. உன்னைப் பின்பற்றி வழிகெட்டவர்கள் அனைவருக்கும் நரகம்தான் வாக்களிக்கப்பட்ட இடமாகும். (ஸூரா - அல்ஹிஜ்ர்; பிரிவு: 3)

9. நிச்சயமாக பயபக்தியுடையவர்கள் சுவர்க்கத்திலும், நீரூற்றுகளிலும் சுகம் பெற்று இருப்பார்கள். அவர்களை நோக்கி, "சாந்தியுடனும், அச்சமற்றவர்களாகவும் நீங்கள் இதில் நுழையுங்கள்" என்று கூறப்படும். (ஸூரா - அல்ஹிஜ்ர்; பிரிவு: 4)

10. சுவர்க்கத்தில், அனைவரது உள்ளங்களிலிருந்து குரோதங்கள் நீக்கப்பட்டு விடும். சுவர்க்கத்தில் தங்கியிருப்பவர்கள், சகோதரர்களைப் போலிருப்பர். எவ்வித துன்பமும் அவர்களைத் தொடாது. அதிலிருந்து அவர்கள் வெளியேற்றப்படவுமாட்டார்கள். (ஸூரா - அல்ஹிஜ்ர்; பிரிவு: 4)

11. வானவர்கள், இப்ராஹீம் (அலை) அவர்களைச் சந்தித்து பிறக்கப்போகும் அறிவார்ந்த குழந்தையைப் பற்றி நற்செய்தி கூறினர். (ஸூரா - அல்ஹிஜ்ர்; பிரிவு: 4)

12. முதுமை நிலையை அடைந்த இப்ராஹீம் (அலை) அவர்களுக்கு, வானவர்கள் சொன்ன நற்செய்தி ஆச்சரியமாக இருந்தது. 'நிராசை கொள்ள வேண்டாம்' என்றனர் வானவர்கள். அதற்கு இப்ராஹீம், 'வழி தவறியோர் தவிர வேறு யார் தம் இறைவனின் அருள்மீது நிராசை கொள்வர்' என்று கூறினார். (ஸூரா - அல்ஹிஜ்ர்; பிரிவு: 4)

13. அதே வானவர்கள், விருந்தினர்களாக, மனித உருவத்தில் லூத் (அலை) அவர்களிடம் வந்தனர். 'அந்த ஊருக்கு அழிவு வரப்போகிறது. ஆகையால் லூத் (அலை) தம் குடும்பத்தினரை அழைத்துக்கொண்டு அந்த ஊரை விட்டு இரவோடு இரவாக வெளியேறிவிடவேண்டும்' என்று வானவர்கள் அறிவுறுத்தினர். (ஸூரா - அல்ஹிஜ்ர்; பிரிவு: 5)

14. அப்போது அவ்வூர்க்காரர்கள், (லூத் அலை அவர்களிடம்) வந்து தூதுவர்களை, ஓரினச்சேர்க்கைக்காக தங்களிடம் ஒப்படைக்குமாறு கோரினர். (ஸூரா - அல்ஹிஜ்ர்; பிரிவு: 5)

15. அதற்கு லூத், "எனது விருந்தினர்களை விட்டு விடுங்கள். எனது மகள்கள் இருக்கின்றனர், அவர்களை வேண்டுமானால் திருமணம் செய்து கொள்ளுங்கள்" என பதில் அளித்தார். (ஸூரா - அல்ஹிஜ்ர்; பிரிவு: 5)

16. அவர்கள் மதிமயக்கத்தில் உழன்று கொண்டிருந்தனர். இறுதியாக இடிமுழக்கம் அவர்களைத் தாக்கியது. அல்லாஹ் அவ்வூரை தலைகீழாக புரட்டி அவர்கள் மீது சுட்ட கல்மழை பொழிய வைத்தான். (ஸூரா - அல்ஹிஜ்ர்; பிரிவு: 5)

17. (ஸமூது சமூகத்தாராகிய) ஹிஜ்ர்வாசிகளும் தங்களுடைய தூதகளை ஏற்றுக்கொள்ள மறுத்தனர். தங்களுடைய பாதுகாப்புக்காக மலைகளை குடைந்து வீடுகளாக மாற்றி குடியிருந்தனர். ஆனால் அழிவிலிந்து அவர்களப் பாதுகாக்க அவை பயனளிக்கவில்லை. (ஸூரா - அல்ஹிஜ்ர்; பிரிவு: 6)

18. நபியே! நாம் உமக்கு, திரும்ப திரும்ப ஓதப்படும் ஏழு வசனங்களையும் (அதாவது, சூரத்துல் பாத்திஹாவையும்) மகத்துவமிக்க குர்ஆனையும் அருளினோம். (ஸூரா - அல்ஹிஜ்ர்; பிரிவு: 6)

19. நபியே! ஏளனம் செய்வோரிடமிருந்து நிச்சயமாக உம்மை நாம் காப்போம். (ஸூரா - அல்ஹிஜ்ர்; பிரிவு: 6)

20. நபியே! அவர்கள் உமக்கெதிராக பேசுகின்ற பேச்சால் உமது நெஞ்சம் இறுக்கமடைகிறது என்பதை உறுதியாக நாம் அறிவோம். (ஸூரா - அல்ஹிஜ்ர்; பிரிவு: 6)

21. ஆகவே, உம்முடைய இறைவனைப் புகழ்ந்து துதிப்பீராக! அவனுக்கு ஸஜ்தா - சிரம்பணிவோரில் ஒருவராக ஆகிவிடுவீராக! (ஸூரா - அல்ஹிஜ்ர்; பிரிவு: 6)

## ஒரு பார்வை - பகுதி 4

**அல்லாஹ்வின் படைப்புகளின் அதிசயத்தைப் பார்த்து நாம் சிந்திக்கவேண்டும். இந்த படைப்புகள் அனைத்தும் மனிதகுலத்திற்கு பயனாக உருவாக்கப்பட்டவை; ஆயினும் பலர் அல்லாஹ்வை மறுக்கிறார்கள். காஃபிர்கள் மறுமை பற்றி சந்தேகம் கொள்கிறார்கள். ஆனால் இது அல்லாஹ்வின் உண்மையான வாக்குறுதியாகும்; அதை அவன் செயல்படுத்திக் காட்டுவான்.**

## தராவிஹ் - 11: (ரக்அத் 13 முதல் 16)

### ஸூரா - 16, அந்நஹ்ல்; வசனம்: 1 - 40; பிரிவு: 1 - 5

1. **அல்லாஹ், மனிதனை விந்துத் துளியிலிருந்து படைத்தான். ஆனால் அவனோ, பகிரங்கமாக தர்க்கம் புரிபவனாக இருக்கின்றான். (ஸூரா - அந்நஹ்ல்; பிரிவு: 1)**

2. **கால்நடைகளையும் அவனே படைத்தான். அவற்றில் உங்களுக்கு கதகதப்பான ஆடை, இறைச்சி, சுமை ஏற்றிச் செல்வது போன்ற பயன்பாடுகள் உள்ளன. (ஸூரா - அந்நஹ்ல்; பிரிவு: 1)**

3. **அதேபோல் குதிரைகள், கோவேறுக் கழுதைகள் மற்றும் கழுதைகள் ஆகியவற்றை படைத்தான். மேலும் நீங்கள் அறிந்திராத பலவற்றையும் படைத்தான். (ஸூரா - அந்நஹ்ல்; பிரிவு: 1)**

4. **அல்லாஹ், வானத்திலிருந்து மழையை இறக்கி, அதன் மூலமாக பயிர்களையும், ஆலிவ் மரம், பேரிச்சமரம், திராட்சை மற்றும், அனைத்து வகை கனிகளையும் முளைக்கச் செய்கிறான். சிந்திக்கின்ற மக்களுக்கு இவற்றில் சான்றுகள் உள்ளன. (ஸூரா - அந்நஹ்ல்; பிரிவு: 2)**

5. இரவையும், பகலையும், சூரியனையும், சந்திரனையும் உங்களுக்கு வசப்படுத்திக் கொடுத்துள்ளான். விண்மீன்களும் அவன் ஆணைக்கு அடிபணிந்துள்ளன. நிச்சயமாக இதிலும் ஆய்ந்து அறியக் கூடிய மக்களுக்கு அத்தாட்சிகள் இருக்கின்றன. (ஸூரா - அந்நஹ்ல்; பிரிவு: 2)

6. அவன்தான் உங்களுக்கு கடலை வசப்படுத்திக் கொடுத்தான். அதிலிருந்து புத்தம் புதிய இறைச்சியும், அணிந்து கொள்ளும் ஆபரணங்களும் கிடைக்கின்றன. கடலைப் பிளந்து கொண்டு கப்பல் செல்லும். கப்பலில் பயணித்து இறைவனின் அருளை தேடிக் கொள்வதற்கும், நீங்கள் நன்றி செலுத்துவதற்காகவும் இவ்வாறு அவன் செய்தான். (ஸூரா - அந்நஹ்ல்; பிரிவு: 2)

7. பூமி அசையாதிருப்பதற்காக அதன் மேல் உறுதியான மலைகளை நிறுத்தினான். நதிகளையும் ஓடச்செய்தான். பாதைகளையும் பல அடையாளங்களையும் வழி அறிந்துகொள்ள விண்மீன்களயும் அவன் ஏற்படுத்தினான். (ஸூரா - அந்நஹ்ல்; பிரிவு: 2)

8. அனைத்தையும் படைத்த அவன், எதையுமே படைக்காதவனுக்கு ஒப்பாவானா? நீங்கள் ஏன் படிப்பினை பெறக்கூடாது? அல்லாஹ்வின் அருட்கொடையை நீங்கள் கணக்கிட்டுவிட முடியாது. (ஸூரா - அந்நஹ்ல்; பிரிவு: 2)

9. ஒவ்வொரு சமூகத்தாருக்கும் தூதர்கள் அனுப்பப்பட்டனர், அவர்களை நல்வழிப்படுத்துவதற்காக. ஆகவே, இறைமறுப்பாளர்கள், தங்களுக்கு எந்த எச்சரிக்கையும் வரவில்லை என்று கூறி தப்பிக்க முடியாது. (ஸூரா - அந்நஹ்ல்; பிரிவு: 5)

10. “இறந்தவர்களை அல்லாஹ் மீண்டும் உயிர் கொடுத்து எழுப்ப மாட்டான்”, என்று அவர்கள் அல்லாஹ்மீது சத்தியம் செய்கின்றனர். (ஸூரா - அந்நஹ்ல்; பிரிவு: 5)

11. அவ்வாறன்று! “இறந்து போனவர்களை மறுபடியும் உயிர் கொடுத்து எழுப்புவது” அல்லாஹ், தன் மீதே விதித்துக்கொண்ட வாக்குறுதியாகும். அவர்கள் கருத்து முரண்பாடு கொண்டிருந்த விஷயங்களில் உண்மை என்ன என்பதை அல்லாஹ், அவர்களுக்கு தெளிவு படுத்துவதற்காக அவர்களை மீண்டும் எழுப்புவான். (ஸூரா - அந்நஹ்ல்; பிரிவு: 5)

12. அல்லாஹ் ஒன்றை உருவாக்க நாடினால் அதற்காக அவன் கூறுவதெல்லாம், “ஆகுக!” என்பது தான். உடனே அது ஆகிவிடும். (ஸூரா - அந்நஹ்ல்; பிரிவு: 5)

## <u>ஒரு பார்வை - பகுதி 5</u>

**கால்நடைகளிலிருந்து பால், தேனீக்களிடமிருந்து தேன், விலங்குகளிடமிருந்து கம்பளி, உரோமத்தாலான பொருட்கள் மற்றும் தோல் போன்றவை அல்லாஹ்வின் அடையாளங்களாக குறிப்பிடப்பட்டுள்ளன. இவை அனைத்தும் அல்லாஹ் நமக்கு வழங்கிய அருட்கொடைகளைப் பற்றி சிந்திக்கவும், புரிந்துகொள்ளவும் உதவுகிறது. மேலும் இவை அனைத்தும் மனிதகுலம், அல்லாஹ்விடம் சரணடைய வேண்டும் என்பதை உறுதிப்படுத்துகிறது.**

## <u>தராவிஹ் - 11: (ரக்அத் 17 முதல் 20)</u>

### <u>ஸூரா - 16, அந்நஹ்ல்; வசனம்: 41 - 89; பிரிவு: 6 - 12</u>

1. **வானவர்கள் உட்பட, வானங்கள் மற்றும் பூமியிலுள்ள அனைத்து உயிரினங்களும் அல்லாஹ்விற்கு ஸஜ்தா செய்கின்றனர். அவர்கள் கர்வம் கொள்வதில்லை. <u>(சஜிதா - 3).</u> (ஸூரா - அந்நஹ்ல்; பிரிவு: 6)**

2. **உங்களிடம் இருக்கும் எல்லா அருட்கொடைகளும் அல்லாஹ்விடமிருந்து கிடைத்தவைதான். பின்னர் ஏதாவது ஒரு துன்பம் உங்களுக்கு வந்தால், அவனிடமே அதை நீக்குமாறு நீங்கள் முறையிடுகிறீர்கள். (ஸூரா - அந்நஹ்ல்; பிரிவு: 7)**

3. **அல்லாஹ்தான் வானத்திலிருந்து மழைநீரை பொழிய வைக்கின்றான். அதன் மூலம் பூமியை, அது வறண்டுபோன பிறகு உயிர் கொடுக்கிறான். நிச்சயமாக இதில் செவியேற்கும் மக்களுக்கு சான்று இருக்கிறது. (இந்த குர்ஆன் இது போன்ற நோக்கத்திற்காகவே இறக்கப்பட்டுள்ளது). (ஸூரா - அந்நஹ்ல்; பிரிவு: 8)**

4. கால்நடைகளிலே உங்களுக்கு படிப்பினை உண்டு. சாணத்திற்கும் இரத்தத்திற்குமிடையில் தூய்மையான பால் உற்பத்தி செய்து உங்களுக்கு புகட்டுகிறோம். (ஸூரா - அந்நஹ்ல்; பிரிவு: 9)

5. அல்லாஹ், தேனீக்களுக்கு அவற்றிற்கான கூடுகளை கட்டிடுமாறும், அனைத்து கனிகளிலிருந்தும் தேனை உறிஞ்சிக் கொள்ளுமாறும் அறிவித்து, அதற்கான எளிய பாதைகளை அமைத்துக் கொடுத்தான். அதன் வயிற்றிலிருந்து பல வண்ணங்களில் வெளியாகின்ற தேன்களில் மனிதனுக்கு நிவாரணம் கிடைக்கிறது. (ஸூரா - அந்நஹ்ல்; பிரிவு: 9)

6. அல்லாஹ், உங்களுக்கு உங்கள் வீடுகளில் அமைதியை ஏற்படுத்தியுள்ளான். கால்நடைகளின் தோல்களால் ஆன வீடுகளையும் ஏற்படுத்தியுள்ளான். பயணத்திலும், ஊரில் இருக்கும் போதும் அவற்றை எளிதாக நீங்கள் கையாளுகிறீர்கள். (ஸூரா - அந்நஹ்ல்; பிரிவு: 11)

7. (செம்மறி, வெள்ளாடு, ஒட்டகம் போன்ற) கால்நடைகளின் உரோமங்களிலிருந்து தயார் செய்யப்படுகின்ற வீட்டுக்குத் தேவையான பொருட்களையும் வழங்கியுள்ளான். (ஸூரா - அந்நஹ்ல்; பிரிவு: 11)

8. அல்லாஹ் தான் படைத்தவற்றில் உங்களுக்கு நிழலை ஏற்படுத்தியுள்ளான். மலைகளில் உங்களுக்கு மறைவிடங்களையும் ஏற்படுத்தியுள்ளான். வெப்பத்திலிருந்து, உங்களை பாதுகாக்கின்ற உடைகளையும், போர்க்கவச உடைகளையும் உங்களுக்கு அல்லாஹ் ஏற்படுத்தியுள்ளான். (ஸூரா - அந்நஹ்ல்; பிரிவு: 11)

9. இவ்வாறு அல்லாஹ் தன் அருட்கொடையை முழுமையாக உங்களுக்கு வழங்கியுள்ளான். இதன் மூலம் நீங்கள் அவனுக்கு கட்டுப்பட்டு நடக்கின்ற முஸ்லீம்களாக ஆகலாம். (ஸூரா - அந்நஹ்ல்; பிரிவு: 11)

10. அந்நாளில் நாம் அவர்களுக்கு எதிரான சாட்சியை அவர்களிடமிருந்தே எழுப்புவோம். நபியே! அவர்களுக்கு எதிரான சாட்சியாக உம்மை நாம் கொண்டுவருவோம். அதனால் தான் எல்லாவற்றையும் விளக்குகின்ற விதத்தில், குர்ஆனை நாம் இறக்கிவைத்தோம். (ஸூரா - அந்நஹ்ல்; பிரிவு: 12)

11. இந்த குர்ஆனை விளக்கம் தரக்கூடியதாகவும், அனைவருக்கும் நேர்வழிகாட்டியாகவும், முஸ்லீம்களுக்கு நற்செய்தியாகவும் உமக்கு நாம் அருளியுள்ளோம். (ஸூரா - அந்நஹ்ல்; பிரிவு: 12)

-------------------------------------------